3. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோமதிசங்கர திட்சிதர் இருக்கையில் இல்லை......

அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளை எடுத்துக்கொள்ளப் படும்.

அடுத்து, விதி 41-ன் கீழ் திரு. அழகுத் தேவர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு உடனடி முக்கியமான கவன ஈர்ப்புக் காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் மழையின்மை யால் ஏற்பட்டுள்ள குடிநீர் பஞ்சம்.

திரு. எஸ். அழகுத்தேவர் : சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ், சாத்தூர், சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மழை இல்லாத காரணத் தால் கடுமையான குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1970-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலேயே இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சி நிலைமை நிலவுவது பற்றித் தெரிவித்தவுடன், குடிநீர் வழங்கல் ஏற் பாடுகளை மேம்பாடு செய்வது உட்பட பல்வேறு இடர் தணிப்புப் பணிகளுக்கான செயற்குறிப்புகளையும் அனுப்பியிருந்தார். சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை வட்டங்கள் அடங்கிய சிவகாசிக் கோட்டம், குடிநீர் பற்றுக்குறை கடுமையாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுள் ஒன்றாகும். 210 குடி நீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 2,35,450 கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு 25 துணைக் கிணறுகளுக்காக ரூ. 3,32,600 ஒதுக்கப்பட வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது.

	கிணறுகளின் எண்ணிக்கை.	தொகை.
	(1)	(2)
ஸ்ரீ வில்லிபுத்தூர் ஒன்றியம் ..	15	3,00,000
இராஜபாளையம் ஒன்றியம் ..	1	20,000
சிவகாசி ஒன்றியம் ..	2	9,000
வேட்பக் கோட்டை ஒன்றியம்	3	3,600
	மொத்தம் ..	3,32,600

இத்தொகையில் சிறப்பு கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ரூ. 8 லட்சத்தைத் தவிர, இந்த நோக்கத்திற்காக வறட்சி இடர் தணிப்பு பணியின் கீழ் இதுவரையில் அரசு ரூ. 2 லட்சத் திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சிறப்புக் கிராமப் பணிகள்

திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் திட்டங்களும், இதில் அடங்கும். தண்ணீர் பற்றுக்குறை உள்ள இடங்களிலும், இடர்ப்பாடான பகுதி களிலும் சாதாரண கிணறுகள் வெட்டுவதற்கான திட்டத்தின் கீழ் ரூ. 2 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், 1970 பிப்ரவரி முதல் ஜூலை வரையிலான கால அளவில் ரூ. 12 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. எனினும், சிவகாசி, வேட்பக்கோட்டை, ஸ்ரீவில்லி புத்தூர், வத்திராயிருப்பு வட்டாரங்களில் இன்னமும் குடி நீர்ப் பற்றுக்குறை உள்ளதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள் ளார். எனவே, இந்த இடர்பாட்டை நீக்குவதற்காக இத்தலைப்பின் கீழ் மேலும் ரூ. 4, 11 லட்சம் வழங்க ஒப்பளிப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இச்செயற் குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தகுந்த ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

4. அரசினர் தீர்மானங்கள்.

அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, சட்டப்பேரவை யின் 21 (3) விதியின்படி, "அரசினர் மசோதாக்கள்" என்ற தலைப் பின்கீழ், இனம் 9—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதா, இனம் 13—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா ஆகியவைகளை அதே தலைப்பில் இனம் 1—தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவுக்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும். இனம் 6—தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இனம் 12—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதாவிற்குப் பிறகு எடுத்துக் கொள்ளவேண்டும்", என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

5. அறிக்கை அளித்தல்

அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஆறுவது அறிக்கை.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, I have the honour to present the Sixth Report (Fourth Assembly) of the Committee on Government Assurances for the year 1970–71.

6. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச்சீர்த்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.